


இராமநாதபுரத்தில் போக்குவரத்துத் துறையின் மூலம் புதிய விரிவான மினிபாஸ் திட்டத்தை வனம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் துவக்கி வைத்தார். உடன் இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ, மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன் ஜித் சிங் காலோன், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், இராமநாதபுரம் நகர் மன்ற தலைவர் ஆர்.கே .கார்மேகம், துணைத் தலைவர் பிரவீன் தங்கம் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலர் ஆனந்த் ஆகியோர் உள்ளனர்.



திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி திருவெண்ணெய்நல்லூர் மேற்கு ஒன்றியம் தடுத்தாட்கொண்டூர் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஏரி நீர் பாசன குழு தலைவரும் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளருமான க.நிர்மல்ராஜ் தந்தை ஆதி.காமராஜ் அவர்களின் மறைவிற்கு கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி அவரைப் பிரிந்து வாடும் குடும்பத்திற்கு ஆறுதல் கூறினார். உடன் மாநில இளைஞர் அணி துணை செயலாளர் அப்துல் மாலிக், தேர்தல் தொகுதி பார்வையாளர் கார்த்திகேயன், ஒன்றிய கழக செயலாளர் பி.வி.ஆர்.சு.விசுவநாதன், நகர செயலாளர் பூக்கடை கணேசன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன், கள்ளக்குறிச்சி மாவட்ட அமைப்பாளர் தாகப்பிள்ளை, ஒன்றிய குழு தலைவர் ஓம்சிவசக்திவேல், பேரூராட்சி துணை தலைவர் ஜோதி, மாவட்ட துணை அமைப்பாளர் தேவேந்திரன், மாவட்ட இலக்கிய அணி விஜயபாபு ஒன்றிய அமைப்பாளர்கள் இராஜசேகர், பொன்னுரங்கம், செந்தில். நகர அமைப்பாளர் சுரேஷ் உட்பட பலர் உடன் இருந்தனர்.

### சென்னை டி.எம்.எஸ்.வளாகத்தில் நடைபெற்ற விழாவில்

# நீட் தேர்வு எழுதிய மாணவ, மாணவியர்களுக்கு மனநல ஆலோசனை வழங்கும் திட்டம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூன் 18-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (16.06.2025) சென்னை, தேனாம்பேட்டை, டிஎம்எஸ் வளாகத்தில் உள்ள 108 சேவை மையத்தில் பிரத்யேகமாக அமைக்கப்பட்டுள்ள நீட் தேர்வு எழுதிய மாணவ, மாணவியர்களுக்கு மனநல ஆலோசனை வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்து ஆய்வு மேற்கொண்டார்.

பிறகு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையில் இந்த அரசு பொறுப்பேற்ற நாள் முதல் 104 மருத்துவ தகவல் மையம் தொடங்கி, நீட் தேர்வுகளில் தேர்ச்சி பெறாத மாணவ, மாணவிகளுக்கு மனநல ஆலோசனைகள் வழங்கும் திட்டத்தை தொடர்ச்சியாக 4 ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் நீட் தேர்வுகளில் பங்கேற்று தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கும், நீட் தேர்வில் தேர்ச்சி பெற்று மருத்துவப் பாடத்திற்கு இடம் கிடைக்காத மாணவர்களுக்கும் மனநல ஆலோசனைகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு 12ஆம் வகுப்பு தேர்விலும் கூட தேர்ச்சி பெறாத மாணவ, மாணவியர்களுக்கு மனநல ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

104 ஆலோசனை மையத்தை பொறுத்தவரை, மனநல ஆலோசனைகள் வழங்குவது என்பதையும் கடந்து மாணவர்களுக்கு எதிர்கால கல்விக்கு என்னென்ன உதவிகள் தேவைப்படுகிறதோ, எதைப்படித்தால் வாய்ப்புகள் இருக்கிறது என்பது குறித்தான விளக்கங்கள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் இந்த ஆண்டு தமிழ்நாட்டில் நீட் தேர்வு எழுதிய மாணவர்கள் 1,35,715 பேர், இதில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் 76,181 பேர், தேர்ச்சி பெறாத மாணவர்கள் 59,534 பேர், முதல் கட்டமாக 80 மனநல ஆலோசகர்களை கொண்டு 2 Shiftகள் என்கின்ற வகையில் இன்று மனநல ஆலோசனைகள் வழங்கும் திட்டம்தொடங்கப்பட்டுள்ளது.

80 மனநல ஆலோசகர்கள் இந்த பயிற்சியினை தொடங்கி இருக்கிறார்கள். காலையில் தொடங்கப்பட்ட இத்திட்டத்தில் ஏறக்குறைய 600 மாணவ, மாணவியர்களை தொடர்பு கொண்டு பேசப்பட்டிருக்கிறது. அதில் 30% பேர் இணைப்பு கிடைக்கப் பெறாத நிலையில் இணைப்பு கிடைக்கப் பெற்ற 70% என்கின்ற வகையில் மாணவர்களோடு தொடர்பு கொள்ளப்பட்டிருக்கிறது.

மாணவர்களிடத்தில் நீட் தேர்வு தேர்ச்சி பெற தவறியிருந்தாலும், அடுத்தடுத்த வாய்ப்புகள் இருக்கிறது, மீண்டும் இதே தேர்வு சந்திக்கும் நிலை இருக்கிறது. எனவே மனம் தளராமல் உங்களுடைய படிப்பை தொடர வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது. அதேபோல் பெற்றோர்களிடத்திலும் கூட பிள்ளைகளிடம் அதிகம் உணர்ச்சிவசப்படக்கூடாது, அதிகமாக கோபப்படகூடாது, குழந்தைகளிடம் பதட்டத்தை ஏற்படுத்தக் கூடாது என்று பெற்றோர்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் இன்று அந்தப் பயிற்சி தொடங்கப்பட்டிருக்கிறது. 59,534 பேர் இலக்கு என்கின்ற வகையில் இந்தப் பயிற்சி தொடங்கப்பட்டிருந்தாலும், தேர்ச்சி பெற்றவர்களின் எண்ணிக்கை 76,181 பேர், தேர்ச்சி பெற்ற இவர்களுக்கு மருத்துவ இளங்கலை படிப்புகளுக்கு மட்டும் 11,850 பேருக்கு மட்டுமே வாய்ப்பு. தமிழ்நாட்டில் உள்ள ஒட்டு மொத்த அரசு மற்றும் தனியார் மருத்துவக்கல்லூரிகள் என்று 75 இருக்கின்றது. இந்த 75 மருத்துவக்கல்லூரிகளிலும் இளங்கலை மருத்துவப் படிப்புகளுக்கான வாய்ப்பு 11,850 பேருக்கு மட்டுமே. அதோடுமட்டுமல்லாமல் MBBS எனும் மருத்துவப் படிப்பைத் தொடர்ந்து வெவ்வேறு வாய்ப்புகளும் இருக்கிறது என்று அறிவுறுத்தப்படுகிறது.


குறிப்பாக பல் மருத்துவம், நர்சிங், பாரா மெடிக்கல் என்று ஏறத்தாழ 20,000த்திற்கும் மேற்பட்ட படிப்புகளில் சேர்வதற்குரிய வாய்ப்புகள் இருக்கிறது. இதோடுமட்டுமல்லாமல் கால்நடை மருத்துவம் போன்ற பல்வேறு வாய்ப்புகள் இருக்கின்றன. அதோடு மருத்துவத்துறையிலேயே இந்திய மருத்துவம் என்று சொல்லக்கூடிய சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி போன்ற படிப்புகளையும் நீங்கள் தொடரலாம் என்று அறிவுறுத்தப்படுகிறது. நீட் தேர்வு இல்லாமலேயே நேரடியாக 12ஆம் வகுப்பு மதிப்பெண்களை வைத்து சேரக்கூடிய யோகா போன்ற பட்டப் படிப்புகள் இருக்கின்றது.

எனவே மாணவர்களின் மனநலனை இன்றைக்கு திடப்படுத்திடும் வகையில் அடுத்தடுத்து இருக்கும் வாய்ப்புகள் அவர்களுக்கு அறிவித்திடும்வகையிலும் ஒரு முயற்சியாக மனநல ஆலோசனை பயிற்சி தொடங்கப்படுகிறது.

மேலும் மாணவர்களுக்கு எந்த மாதிரியான மனநல ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளது என்றால் தனிமையை தவிர்த்துக் கொள்ள வேண்டும், மற்றவர்களிடத்திலிருந்து விலகி இருப்பதை குறைத்துக் கொள்ள வேண்டும், தூக்கமின்மை, பசியின்மை, தற்கொலை முயற்சி, தற்கொலை எண்ணம், தொடர்ந்து அழுதுக் கொண்டிருப்பது, அதிகமாக கோபம் கொண்டு அருகில் இருப்பவர்களிடம் பேசுவது என்று பயத்தோடு, பதற்றத்தோடு இருக்கும் மாணவர்களை நிதானப்படுத்துவதோடு, அவர்களுக்கான மன அமைதியை ஏற்படுத்துகின்ற வகையில் இந்தப் பயிற்சி பயன்படும்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மரு.எழிலன் நாகநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில் குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு. அருண்தம்புராஜ், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் மரு. வினித், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு. செல்வவிநாயகம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு. சங்குமணி, மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.இராஜமூர்த்தி மற்றும் உயரலுவலர்கள் உடனிருந்தனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் செம்மொழி தினத்தை முன்னிட்டு மண்டபம் ஊராட்சி ஒன்றியம் தொடக்கப்பள்ளி மாணவ, மாணவியருக்கு மண்டபம் நகர் தி.மு.க., இளைஞரணி சார்பில் குறிப்பேடு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. தலைமை ஆசிரியை ராஜேஸ்வரி தலைமை வகித்தார். இதில் பள்ளியில் பயிலும் 251 மாணவ, மாணவியருக்கு குறிப்பேடுகளை இராமநாதபுரம் மாவட்ட செயலாளர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ, வழங்கினார். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சம்பத் ராஜா மற்றும் நகர் செயலாளர் அப்துல் ரஹ்மான் மரைக்காயர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் மிசா அஹமது தம்பி, சிறுபான்மை பிரிவு மாவட்ட துணைத்தலைவர் பாரூக், துணை அமைப்பாளர் ரமேஷ் கண்ணா, கவுன்சிலர்கள் பூவேந்திரன், முருகானந்தம், சாதிக் பாட்சா, முஹமது மீரா சாகிப் மற்றும் கழக செயல்வீரர்கள் பகுர்தீன், குலாம், ஓஜிர், ஆதம், ஆறுமுகம், பாண்டி, நாகராஜ், ஆசாத், கஜினி, அஜ்மல், ஆயுப்கான், செய்யது இபுறமுசா, ஜாவுதீன், ஹாஜா, இபுறமுசா, ரகுமான்கான், நிஷாந்த், ஆசிரியர்கள் சிவக்குமார், இந்திரா காந்தி, சீதா லட்சுமி, ஜெயா, சந்திரா உள்பட பலர் கலந்து கொண்டனர். நகர் தி.மு.க. இளைஞரணி அமைப்பாளர் வாசிம் அக்ரம் மற்றும் இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஏற்பாடு செய்தார்கள்.

### கரூர் மாவட்டத்தில் 4 ஆண்டுகளில்

# ரூ. 3,000 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சித் திட்டப் பணிகள்!

## மாவட்டச் செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. தகவல்!

கரூர், ஜூன் 18-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் கரூர் மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் ரூ. 3,000 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சி திட்டப் பணிகள் நடைபெற்றுள்ளது என கரூர் மாவட்ட கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. தெரிவித்தார்.



கரூர் மாவட்டம். மண்மங்கலம் வட்டம், வாங்கல் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில், மாவட்ட ஆட்சியர் மீ. தங்கவேல் தலைமையில் புற்றுநோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை விரிவாக்கத் திட்டத்தினை கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி தொடங்கி வைத்தார்.

பின்னர் அவர் கூறியதாவது:-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க செயல்படுத்தப்பட்டு வரும் முன்னோடி திட்டங்களில் ஒன்றான கரூர் மாவட்டத்தில் 18 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கு வாய் புற்றுநோய் கண்டறிதலும், 30 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கு மார்பக மற்றும் கர்ப்பப்பை வாய் புற்றுநோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை விரிவாக்கத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் கரூர் புற்றுநோய் இல்லா மாவட்டமாக உருவாகும் நிலையை அடைய முடியும். இந்த சிகிச்சைக்கான பரிசோதனைகள் முழுவதும் இலவசம் என்பதால் ஏழை எளிய மக்களுக்கு இது மிகவும் பயனுள்ளதாக அமையும் புற்றுநோய் பரிசோதனையின் போது புற்றுநோயால் பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டால் மேல்சிகிச்சைக்கு தேவைப்படும் அனைத்து மருத்துவ செலவுகளையும் தமிழ்நாடு அரசே ஏற்கும்.

இதில் கரூர் மாவட்டத்தில் 37 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள். 7 அரசு மருத்துவமனைகள் மற்றும் கரூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை உட்பட 45 மையங்களில் புற்றுநோய்க்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் இத்திட்டத்தின் மூலம் கூடுதலாக 101 கிராமப்புற சுகாதார நலவாழ்வு மையங்கள் மற்றும் 4 நகர்புற நலவாழ்வு மையங்கள் உட்பட 105 மையங்களில் இச்சேவைகள் விரிவுபடுத்தப்பட்டு புற்றுநோய்க்கான இலவச பரிசோதனை வசதிகள் பொதுமக்கள் வசிக்கும் இடத்திற்கு அருகிலேயே வழங்கப்பட உள்ளது.

18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலருக்கும் ஆண்டுக்கு ஒரு முறை வாய்ப்புற்று நோய் பரிசோதனையும் மற்றும் 30 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை மார்பக மற்றும் கருப்பைவாய் புற்றுநோய் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு புற்றுநோய்க்கான அறிகுறிகள் கண்டறியப்படின் அரசு மருத்துவமனைகள், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் முதலமைச்சரின் காப்பீட்டு திட்டத்தின் கீழ் இயங்கும் தனியார் மருத்துவமனைகளுக்கு மேல் சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்படுவார்கள்.

அரசு அலுவலகங்கள் மற்றும் தொழிற்சார் நிறுவனங்களில் மருத்துவக் குழுவினரை கொண்டும் முதலமைச்சரின் காப்பீட்டு திட்டத்தின் கீழ் இயங்கும் தனியார் மருத்துவமனைகளிலும் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலமாகவும் இலவச புற்றுநோய் பரிசோதனைகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. கரூர் மாவட்டத்தில் இதுவரை 3658 நபர்களுக்கு ஒருங்கிணைந்த புற்றுநோய் கண்டறிதலுக்கான அழைப்பிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை மாவட்டத்தில் வாய் புற்றுநோய்க்கு 967 நபர்கள். கர்ப்பபை வாய் புற்றுநோய்க்கு 666 பெண்களும் மற்றும் மார்பக புற்றுநோய்க்கு 747 பெண்களுக்கும் பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் கடந்த நான்கு ஆண்டுகளில், கரூர் மாவட்டத்தில் அரசு வேளாண்மைக் கல்லூரி அமைப்பதற்காக ரூ. 7.00 கோடி மதிப்பிலான 40 ஏக்கர் நிலம் மற்றும் கல்லூரிக் கட்டடம் கட்டுவதற்காக ரூ. 76.00 கோடி நிதியும் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். 250 ஏக்கர் பரப்பளவில் சிப்காட் நிறுவனம் அமைப்பதற்கான இடம் தேர்வு செய்து அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்ப பூங்கா அமைப்பதற்கான இடம் தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது. கரூர் மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் ரூ.3,000 கோடி மதிப்பீட்டில் புதிய வளர்ச்சி திட்டப்பணிகள் நடைபெற்றுள்ளது என வி. செந்தில்பாலாஜி தெரிவித்தார்.

தொடர்ந்து மண்மங்கலம் வட்டம். கடம்பங்குறிச்சியில் நீர்வளத் துறையின் மூலம் பாப்புலர் முதலியார் வாய்க்காலில் பராமரிப்பு பணியின்கீழ் நெடுகை 2 கி.மீ முதல் 9 கி.மீ வரை படர்ந்துள்ள செடி கொடிகளை ரூ. 7.இலட்சம் மதிப்பீட்டில் அப்புறப்படுத்தும் பணியினை செந்தில்பாலாஜி பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ம. கண்ணன், இணை இயக்குநர் (மருத்துவப் பணிகள்) மரு. செழியன். துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.சுப்பிரமணி, கரூர் வருவாய் கோட்டாட்சியர் முகமது பைசல். நீர்வளத்துறை உதவிப் பொறியாளர் சதீஸ் கலந்துகொண்டனர்.

### உச்சநீதிமன்ற நீதியரசர்

### எம்.எம்.சுந்தரேஷின் தந்தை

# மூத்த வழக்கறிஞர் வி.கே.முத்துசாமி மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூன் 18–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு :-

மாண்பமை உச்சநீதிமன்ற நீதியரசர் எம்.எம். சுந்தரேஷ் அவர்களின் தந்தையும் மூத்த வழக்கறிஞருமான வி.கே.முத்துசாமி அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகுந்த துயருற்றேன்.

வளர்த்து ஆளாக்கி, அவையத்து முந்தி இருப்பச் செய்த அருமைத் தந்தையினை இழந்து தவிக்கும் நீதியரசர் திரு. சுந்தரேஷ் அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



விழுப்புரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள் கிளை மற்றும் பூத் வாரியாக நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணி நிர்வாகிகளின் படிவங்களை விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அவர்களிடம் வழங்கினர். சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் அ.சிவா, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன் தொகுதி பொறுப்பாளர்கள் கார்த்திகேயன், சிவ ஜெயராஜ், மாவட்ட துணைச் செயலாளர் டி.என்.முருகன், மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் மு.தங்கம், மாநில மகளிர் அணி எம்.தேன்மொழி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.செல்வராஜ் அப்துல்சலாம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள். எஸ்.அன்பு, எஸ்.பாலாஜி உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் பலர் உடன் இருந்தனர்.